1973 ஆகஸ்ட் 13]

வரும் பெருநகாங்களான கோவை, மதுரை, திருச்சி போன்ற நகரங்களிலும், புறநகர்ப் பகுதிகளில் போக்குவரத்தை எளிதாக்கும் வகையில் இதுபோன்ற மின்சார இரயில்களை விடுவதற்கு மத்திய அரசை மாநில அரசு கேட்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, சென்னையைச் சுற்றிப் போடவில்லை. சென்னையிலிருந்து அரக்கோணத்திற்கு போட இருக்கிறோம். பாக்கியிடங்களைப் பற்றி விவரங்கள் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, மின்சாரப் பற்றாக்குறை நமக்கு இருப்பதால் இப்படிப்பட்ட மின்சாரத்தைக் கொடுக்காமல் இருக்க அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை. இப்படிக் கொடுப்பதால் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படாது என்றுதான் கணக்கிடப்பட்டிருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்திய இரயில்வே இலாக்கா தமிழகத்தில் இருக்கும் மீட்டர்கேஜ்களை அகற்றிவிட்டு, பிராட்கேஜ் போடுவதற்காகத் திட்டம் வகுக்கப்பட்டதே, அது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

பல்புகள் உற்பத்தி.

*112 வினா—**திரு. எம். சுரேந்திரன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சார வாரியத்தின் கீழ், ஓர் பல்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருக்கிறதா?

(உ) வருடத்துக்குத் தேவைப்படும் பல்புகளின் எண்ணிக்கையும் அதன் ரூபாய் மதிப்பும் கணக்கிடப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ), (இ) & (உ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : சார், மின்சார பல்புகள் மிகவும் அதிக மாகத் தேவைப்படுவதால், இதை நாமே ஏற்றுச் செய்வதற்கு முறையான காரியங்கள் நடைபெறுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மின் வாரியம் இதைப்பற்றிப் பரிசீலித்து, அவர்களுடைய தேவை ஒரு பெரிய தொழிற்சாலை அமைக்கப்போதாது, ஆகவே, வயபிள் யூனிட் ஆரம்பிக்க வேண்டு மென்ற முடிவை தெரிவித்திருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், மாதவரம் பகுதியில் பல்பு ஃபேக்டரி இருந்தது. அதனுடைய தயாரிப்பு பாதிக்கப்பட்டு, அது ஒழுங்காக நடைபெறுவதில்லை. ஆகவே, இப்பொழுது இருக்கும் அப்படிப்பட்ட 'சிக் இண்டஸ்ட்ரிகளை' சீர்படுத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : Zenith Lamp Factory ரொம்ப நாள் பிரச்சினை, நீண்ட பிரச்சினை. திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னதைப்போல அவர்கள் அப்படித் திட்டம் தந்தால் பரிசீலிக்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த பல்பு விஷயங் களில் 'எல்மி குரூப்' என்ற ஸ்டாண்டர்ட் குரூப்பை அந்தந்த இலாக்காக்கள் பயன்படுத்துகிறது என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப்பற்றி மின்சார வாரியத்திடம்தான் கேட்க வேண்டும்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, மின்சார பல்புகள் முன்பு இருந்ததைவிட இப்பொழுது விரைவில் பழுதடைவதை உணர்கிறோம். இப்படிப்பட்ட நிலையில்லாமல் நீண்ட நாட்களுக்கு உழைக்கும் அளவில், இதைக் கருத்திற்கொண்டு பல்புகளை நல்ல முறையில் செய்ய ஆவன செய்யுமா?

@ 276-ம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது மின்சார பல்பு தொழிற்சாலையைப் பற்றிய கேள்வி. மின்சார வாரியத்திலே எப்படிப்பட்ட பல்புகளை உபயோகிக்கிறார்கள், யாரிடத்திலே வாங்குகிறார்கள் என்ற விவரம் என்னிடத்திலே இல்லை.

Steel wire manufacturing company

*113 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any factory for the production of sttel wire has been opened in December 1972; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) சென்னையில் உள்ள திருவாளர்கள் மோடி மானுபாக்சரிங் கம்பெனி ஆண்டு ஒன்றுக்கு 10,000 டன்கள் பல்வேறு வகைப்பட்ட எஃகு கம்பிகளை உற்பத்தி செய்வதற்கு, அம்பத்தூரில் ஒரு தொழிற்சாலையை நிறுவியிருக்கிறார்கள். அத்தொழிற்சாலை 23—12—1972 அன்று துவக்கிவைக்கப்பட்டது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த எஃகு உற்பத்தி தொழிற்சாலைகளுக்கெல்லாம் 'ரா மெட்டீரியல்ஸ்' பற்றாக்குறை இருப்பது அரசுக்குத் தெரியுமா? ரீ-ரோலிங் மில்ஸ் ஆரம்பித்திருப்பவர்கள் ரா மெட்டீரியல்ஸ் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். அதற்காக அதிகக் கோட்டாவைப் பெற்றுத்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்கள் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசு D.G.&S.D. மூலம் முடிவு செய்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலே இங்கே மாநிலத்திலே தொழிற்சாலைகளிடம் சிபார்சு செய்கிறோம். பத்திலே ஒன்றுதான் கொடுப்பதாகக் கணக்கு.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட தொழிற்சாலைகளில் எத்தனைத் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் அதனுடைய உற்பத்தித் திறன் எவ்வளவு என்பதை அரசு சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆண்டு ஒன்றுக்கு 10,000 டன்.